BOC ரண் கெக்குளு ஸ்மாட்				
கணக்கின் தன்மை	**வாடிக்கையாளருக்கான நன்மைகள்**	**ஆரம்ப வைப்புகளும் கட்டணங்களும்**	**தகுதி**	**முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்**
BOC ரண் கெக்குளு ஸ்மாட் என்பது 18 வயதிற்கும் குறைவான சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்காகும்.	சாதாரண சேமிப்பு வட்டி வீதத்தினைவிட 1.5% அதிக வட்டி வீதம் -கணக்குரிமையாளருக்கு காப்புறுதிக் காப்பீடு -மரணித்த/நிரந்தமாக அங்கவீனமுற்ற கணக்குத் திறக்கும் பெற்றோர்/பாதுகாவலருக்கு காப்பீடு -தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு புலமைப்பரிசில்கள் -இலவச SMS அறிவுறுத்தல்கள்	• ஆரம்ப வைப்பு 250/- ரூபாய் • **கணக்கை முடிவுறுத்தும் கட்டணம் 500/- ரூபாய்** • **கணக்குப் பேணுதலும் பிற கட்டணங்களும்** • கணக்கின் மிகுதிக்கு மாதாந்த சேவைக் கட்டணம் இல்லை. -அச்சிடப்பட்ட கூற்றுகள் -நகல் கணக்குப் புத்தகம் -கணக்கு மிகுதியை உறுதிப்படுத்தல் • **வரிகள்-** அரசாங்கத்தின் மற்றும் அல்லது இலங்கை ஒழுங்குமுறை ஆணையத்தின் அல்லது இலங்கை வங்கியின் அவ்வப்போதான தேவைகளுக்கேற்ப பொருத்தமான முற்பண வருமான வரி, ஏனைய வரிகள் (AIT), கட்டணங்கள் (ஏதேனும் இருப்பின்) மற்றும் நியதிச் சட்ட தீர்வைகள் என்பவற்றின் கழிவுகளுக்கு வட்டி உட்பட்டதாகும்.	18 வயதுக்கு குறைந்த இலங்கையில் வதியும் எந்தவொரு பிள்ளையும் இக்கணக்கைத் திறக்கலாம். -தனிநபர் கணக்குகளை மாத்திரமே திறக்கலாம். -பெற்றோர்/பாதுகாவலர் பிள்ளையின் பெயரில் இக்கணக்கைத் திறக்கலாம். **கணக்கைத் திறப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்** • BOC ரண்கெகுளு ஸ்மாட் கணக்கிற்குரிய கணக்குத் திறப்பு படிவத்தினை பூர்த்தி செய்து அதனை பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு கிளையிலும் சமர்ப்பிக்கலாம். - பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் (உடன்படிக்கையிலுள்ள விவரங்களை பிறப்புச்சான்றிதழுடன் ஒப்பிட்டு உறுதிபடுத்தவும்) தேசிய அடையாள அட்டை (இருப்பின்) -கணக்கைத் திறக்கும் பெற்றோரின்/ பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை (உடன்படிக்கையிலுள்ள விவரங்களை தேசிய அடையாள அட்டையுடன் ஒப்பிட்டு உறுதிபடுத்தவும்) -முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி (பிறப்புச் சான்றிதழ் மற்றும் தே.அ. அட்டையிலுள்ள முகவரிகள் உடன்படிக்கையில் வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேறுபட்டால்) -விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிரந்தர முகவரியானது குறித்த கிளையிலிருந்து வெகு தொலைவில் இருக்குமாயின் வாடிக்கையாளர் அக்கிளையில் கணக்கைத் திறப்பதற்கான தகுந்த காரணம் குறிப்பிட வேண்டும்.	• கணக்கு உரிமையாளர் 18 வயதை அடையும்போது இக்கணக்கானது 18+ இளைஞர் சேமிப்புக் கணக்காக மாற்றப்படும். இவ்வகை கணக்குகளுக்கான தகுதிகளை கணக்குரிமையாளர் பூர்த்திசெய்யும் திறனைப்பொறுத்து இம்மாற்றம் இடம்பெறும். • இளையோர் 18 வயதை அடையும் வரை கணக்கை முடிவுறுத்துவதோ பணம் மீளப்பெறல் அனுமதிக்கப்படாது. இருப்பினும் சிறுவர்களுக்கு பயனளிக்கும் கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை போன்ற காரணங்களுக்காக வங்கியின் முழு விருப்பத்தின்படி கணக்கை முடிவுறுத்தல் அல்லது பணம் மீளப்பெறல் அனுமதிக்கப்படும். • கணக்கின் விசேட நன்மைகளைப் (காப்புறுதி, பரிசுத் திட்டம், புலமைப்பரிசில் போன்றன) பெறுவதற்கு கணக்குரிமையாளர் கணக்கு மீதி, வைப்பு மற்றும் வயதெல்லை போன்ற வங்கி அவ்வப்போது முடிவு செய்கின்ற தகுதி அளவுகோள்களை பூர்த்திசெய்யவேண்டும். • இவ்வுற்பத்தியுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை கணக்குத் திறப்பு விண்ணப்பப்படிவத்தில் அறிந்துகொள்ளலாம். • மருத்துவம் அல்லது ஆரோக்கியம் தொடர்பான நோக்கங்கள் போன்ற விசேட சந்தர்ப்பங்களை தவிர்த்து வேறு சந்தர்ப்பங்களில் பணப் பரிமாற்றத்திற்கு அனுமதியில்லை.

காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

உங்களுடைய கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: https://www.boc.lk

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.